கோயம்புத்தூர் விமான தளம்

* 246 வினா.—திரு. சு. துரைசாமி : மாண்புமிகு பொதுப் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூர் விமான தளத்தை மேம்படுத்துவதற்கு மாநில அரசு மத்திய அரசைக் கோரியுள்ளதா ?

(இ) ஆம் எனில் அதன் விபரம் என்ன ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) இல்லை, ஐயா.

(இ) கேள்விக்கு இடமில்லை.

திரு. சு. துரைசாமி : பேரவைத் தலைவரவர்களே, பெரிய விமானங்கள் அங்கே வருகின்ற வாய்ப்பு ஏற்படும் சமயத்தில் இறங்குவதற்கு இயலாது என்று தெரிவிக்கப்படுகிறது, எனவே அந்தக் குறைபாட்டைப் போக்க இந்திய அரசாங்கத்தை நமது அரசாங்கம் வற்புறுத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இப்பொழுது வருகின்ற விமானங்களுக்குப் போதுமான தளம் என்றுதான் கருதப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினரவர்கள் சிறப்பான கருத்துக்களைச் சொல்வார்களேயானால் நிச்சயமாக மத்திய சர்க்காருக்குத் தெரியப்படுத்த நடவடிக்கை எடுக்கலாம்.

திரு. எம். தேவராசன் : தலைவரவர்களே, ஆண்டுதோறும் உதகைக்கு ஏராளமான உல்லாசப் பயணிகள் வருவதால் அங்கே விமானதளம் அமைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : சேலம் தூத்துக் குடி விமான தளங்கள் கேட்கப்பட்டதே முடிவாகவில்லை. இவைகள் பூர்த்தியானபிறகு வேண்டுமானால் ஊட்டிக்குச் செல்லலாம்.

Railway facilities for Kanyakumari

* 247 Q.—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Public Works be pleased to state the steps taken by the Government to move the Union Government to secure proper railway links for the people of Kanyakumari ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : நான்காவது ஐந்தாண்டு திட்டத்தில் திருநெல்வேலியிலிருந்து திருவனந்தபுரம் வரை (நாகர்கோயில், கன்னியாகுமரி வழியாக) புதிய ரயில் பாதை அமைக்கும் திட்டத்தை சேர்க்கும்படி மாநில அரசு பரிந்துரை செய்துள்ளது.

திரு. என். டென்னிஸ் : தலைவரவர்களே, இரயில்வே போர்டு வந்து 3 ஆண்டுகளுக்குள் பூர்த்தியாகிவிடும் என்று குறிப்பிடப் படுகிறது. இதற்கு முதல் பிரையாரிட்டி கொடுக்க மத்திய அரசை மாநில அரசு வற்புறுத்துமா ?

சத்தியமேவ ஜயதே TRUTH ALONE TRIUMPHS